# மாகாணக்கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## நிலையறி பரீட்சை – 2021

தரம் 7 **சைவசமயம்** நேரம் -2 மணித்தியாலங்கள்

**பகுதி - I**

- **1 – 20 வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.**

1. எந்தக் காரியத்தையும் தொடங்கும் முன் முதலில் வணங்க வேண்டிய தெய்வம்
   1. முருகன் 2. சிவபெருமான் 3. பிள்ளையார் 4. விஷ்ணு

2. திருச்சிராப்பள்ளிக்கும் திருவானைக்காவிற்கும் இடையில் பெருக்கெடுத்த ஆறு
   1. மகாவலி 2. கோதாவரி 3. தாமிரபரணி 4. காவிரி

3. காரைக்கால் அம்மையாரின் இயற்பெயர்
   1. புனிதவதியார் 2. திலகவதியார்
   3. மங்கையற்கரசியார் 4. இசைஞானியார்

4. “மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்…….” என்ற பாடலடி இடம்பெறும் நூல்
   1. பெரியபுராணம் 2. திருவாசகம் 3. திருக்குறள் 4. கந்தபுராணம்

5. பஞ்சபுராணம் பாடும் போது மூன்றாவதாகப் பாடப்படுவது
   1. திருவிசைப்பா 2. பெரியபுராணம் 3. திருவாசகம் 4. திருப்பல்லாண்டு

6. திருப்பல்லாண்டு பாடியவர்
   1. மாணிக்கவாசகர் 2. திருமூலர் 3. சேந்தனார் 4. சேக்கிழார்

7. மனுநீதி கண்ட சோழன் என்ற பெயருடைய மன்னன்
   1. மாமல்லன் 2. அநபாயசோழன் 3. இராஜராஜன் 4. இராஜேந்திரன்

8. “விருது குன்றமா மேருவில் நாணரா…” என்ற தேவாரத்தில் குறிப்பிடப்படும் புராணக் கதை
   1. பாற்கடல் கடைந்தமை 2. திரிபுரம் எரித்தமை 3. நஞ்சுண்டமை 4. அடிமுடி தேடியமை

9. நாட்டைத் துறந்து, மரவுரி தரித்து வனவாசம் சென்றவர்
   1. இராமன் 2. இராவணன் 3. பரதன் 4. சகாதேவன்

10. ‘தூலலிங்கம்’ என அழைக்கப்படுவது
    1. கொடிமரம் 2. சிவலிங்கம் 3. பலிபீடம் 4. கோபுரம்

11. “இனி நாம் ஐவரானோம்” எனக் கூறியவர்
    1. இராமன் 2. பரதன் 3. குகன் 4. வீதிவிடங்கன்

12. நட்சத்திரங்களுள் எட்டாவது நட்சத்திரம்
    1. திருவாதிரை 2. விசாகம் 3. மகம் 4. பூசம்

13. “நிரைகழலரவம் ……” என்ற தேவாரம் அடங்கும் திருமுறை
    1. 1ம் திருமுறை 2. 2ம் திருமுறை 3. 3ம் திருமுறை 4. 4ம் திருமுறை

14. இலங்கையில் தேவாரப் பாடல் பெற்ற சிவாலயங்களில் ஒன்று
    1. திருக்கோணேச்சரம் 2. நல்லூர் 3. நகுலேச்சரம் 4. முன்னேச்சரம்

15. திருஞானசம்பந்தரால் சைவத்திற்கு மதம் மாற்றப்பட்ட மன்னன்
    1. மனுநீதிகண்ட சோழன் 2. கூன்பாண்டியன் 3. சுந்தரபாண்டியன் 4. மகேந்திரவர்மன்

Education கல்வி

16. **"என்கடன் பணி செய்து கிடப்பதே"** எனக் கூறிப் பணியாற்றியவர்
1. திருஞானசம்பந்தர் 2. மாணிக்கவாசகர் 3. திருநாவுக்கரசர் 4. சுந்தரர்

17. நட்சத்திர விரதங்களுள் ஒன்று
1. சிவராத்திரி 2. ஏகாதசி 3. சதுர்த்தி 4. மாசிமகம்

18. சூரியன் தனு ராசியிலிருந்து மகர ராசியில் பிரவேசிக்கும் காலம்
1. மகரசங்கிராந்தி 2. ஆடிப்பிறப்பு 3. தீபாவளி 4. ஆவணி ஓணம்

19. சிவசக்தி ஐக்கியத்தைக் காட்டும் திருநாளாக விளங்குவது
1. மாசிமகம் 2. ஆடிப்பூரம் 3. தைப்பூசம் 4. சிவராத்திரி

20. "மாலும் அயனும் காணாத நீதியே வடிவானவர்"
1. விஷ்ணு 2. சிவபெருமான் 3. பிள்ளையார் 4. முருகன்

(20 x 2 = 40 புள்ளி)

## பகுதி - II

- முதலாம் வினா உட்பட **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

(1) i. பின்வரும் திருமுறைப் பாடல்களில் **இரண்டினை** வரிக்கிரமமாக பிழையின்றி எழுதுக.
ii. அவற்றைப் **பாடியவர், தலம்** என்பவற்றைத் தருக.

i. "நிரைகழ லரவம் ……….." ii. "மாதர்ப் பிறைக்கண்ணி …."
iii. "அம்மையே அப்பா ……" iv. "பொன்னார் மேனியனே …."

(5+½+½ = 6 x 2 = 12 புள்ளி)

(2) i. விரதம் என்றால் என்ன?
ii. தைப்பூச தினத்தில் மேற்கொள்ளப்படும் சுபகாரியங்கள் **மூன்று** தருக.
iii. மாசிமகத்தின் சிறப்புக்கள் **மூன்று** தருக.
iv. பண்டிகைகளைக் கொண்டாடுவதனால் ஏற்படும் நன்மைகள் **இரண்டு** தருக? (4+3+3+2 = 12 புள்ளி)

(3) i. ஆலயம், கோயில் என்பதன் பொருள் யாது ?
ii. ஆலயத்தில் செய்யக்கூடிய சரியைத் தொண்டுகள் **மூன்றினைத்** தருக.
iii. ஆலய வழிபாட்டின் பொழுது மேற்கொள்ளப்படும் நமஸ்காரங்கள் எவை?
iv. ஐந்தெழுத்து மந்திரம் எது? (4+3+3+2 = 12 புள்ளி)

(4) i. சைவ விழுமியம் என்றால் என்ன?
ii. விழுமியப் பண்புகள் **மூன்றினைக்** குறிப்பிடுக.
iii. பாடசாலையில் கொண்டாடப்படும் சைவசமய விழாக்கள் **மூன்று** தருக.
iv. பஞ்சமாபாதகங்கள் எவை? (4+3+3+2 = 12 புள்ளி)

(5) i. காரைக்கால் அம்மையார் எனப் பெயர்வரக் காரணம் யாது?
ii. காரைக்கால் அம்மையார் அருளிய **மூன்று** நூல்களைக் குறிப்பிடுக.
iii. காரைக்கால் அம்மையாரிடம் காணப்பட்ட சிறந்த நற்பண்புகள் **மூன்றினை** எழுதுக.
iv. காரைக்கால் அம்மையாரின் பக்திச் சிறப்புக்கள் **இரண்டு** தருக.

(4+3+3+2 = 12 புள்ளி)

(6) i. புதுமனை புகுதல் என்றால் என்ன?
ii. புதுமனை குடிபுகும் தினத்தன்று இடம்பெறும் நிகழ்வுகள் யாவை?
iii. வாஸ்த்துசாந்திப் பூசை செய்வதன் நோக்கம் யாது?
iv. புதுமனை புகுதல் என்பதனை வேறு எவ்வாறு அழைப்பர்? (4+3+3+2 = 12 புள்ளி)

Education கல்வி அධ්‍යාපන

(7) கீழ்வருவனவற்றில் எவையேனும் **இரண்டிற்கு** சிறுகுறிப்பு எழுதுக.

i. பாடசாலையில் ஒழுக்கம்

ii. தாயுமான சுவாமி

iii. பண்டிகைகள்

iv. திருமுறைவைப்பு

(6 x 2 = 12 புள்ளி)

Education கல்வி අධ්‍යාපන

Education
கல்வி
අධ්‍යාපන

# தரம் 6,7,8

# தமிழ்

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் தமிழ் பாட வகுப்புகள்.

- ✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
- ✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
- ✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

**மாதக் கட்டணம்**

**850/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**



கல்வி

Digital Learning Platform

www.kalvi.lk

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page